# ஆரச்சிகட்டுவ பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 20 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 28 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமாக ஆறு கட்டிடங்களின் பெறுமதி, பங்கதெனிய நூலகத்திற்கு வழங்கியிருந்த ரூபா 11,160 பெறுமதியான நீர் மோட்டார் மற்றும் தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையில் இருந்து கொள்வனவு செய்திருந்த ரூபா 356,983 இற்கான மீதியான துணைக் கருவிகள் இருப்பின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) தலைவரினால் 2015 ஆண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த வெளிநாட்டு பிரயாணம் ஒன்று தொடர்பாக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 498,500 தொகையினை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் மற்றும் பொது ஒதுக்கக் கணக்கு ரூபா 498,500 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பணமாக கிடைத்திருந்த ரூபா 6,396,788 இற்கான மூலதன உதவியினை வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மூலதன உதவிக் கணக்கின் மீதி ஆகிய ரூபா 7,373,013 இற்கான பெறுமதியினை கடன்பட்டோரிடம் கழித்து காட்டப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியினை நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 07 கணக்கு விடயங்களின் மீதிகளின் பெறுமதி அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. அத்துடன், இணங்கியிருக்காத வித்தியாசத்தின் பெறுமதி ரூபா 492,740 ஆகும்.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

வருமானக் கடன்பட்டோர்கள் மீதியில் அடங்கியுள்ள 05 வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் ரூபா 3,950,537 இற்கான நிலுவை ஆதன வரி வருமானம் காணப்பட்டதுடன், கடன்கொடுத்தோர் மீதியில் அடங்கியுள்ள ஒரு வருடத்தை மிகைத்த மீதிகளின் பெறுமதி ரூபா 4,296,898 ஆகும்.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 4,873,960 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,920,753 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது முறையே ரூபா 15,189,115 உம் மற்றும் ரூபா 5,820,813 உம் மூலதன உதவி மற்றும் முறையே ரூபா 16,210,883 உம் மற்றும் ரூபா 8,151,940 இற்கான மூலதன செலவுகளை கணித்த பின்னர் சபையின் நிதி விளைவு முறையே ரூபா 3,852,192 இற்கான மிகையொன்றும் மற்றும் ரூபா 589,626 இற்கான மிகை ஒன்றாக மாறிய காரணத்தினால் நிதி விளைவுகளில் ரூபா 3,262,566 இற்கான முன்னேற்றமொன்று ஏற்பட்டிருந்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------------

(அ) நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்களின் விகிதாசாரம் 4:1 ஆகக் காணப்பட்டதுடன் ஏற்றுக்கொண்ட விகிதாசாரம் 2:1 ஆகும்.

(ஆ) நடைமுறை சொத்துக்களின் மொத்தப் பெறுமதி 48 மில்லியன் ரூபா ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 40.5 மில்லியன் ரூபாவும், அதாவது மொத்தமாக நூற்றிற்கு 84.3 இற்கான வருமானம் கடன்பட்டோராகும்.

2.3 வருமான நிருவாகம்

----------------------------------

2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த நிலுவை வருமானம் தொடர்பான தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திரண்ட நிலுவையாக வீதவரி 10.7 மில்லியன் ரூபாவும், வாடகை 6.3 மில்லியன் ரூபாவும் , ஏனைய வருமானங்கள் 28.5 மில்லியன் ரூபாவும் காணப்பட்டது.

2.3.2 வீத வரி

----------------

மீளாய்வாண்டின் போது இணக்கச் சான்றிதழ் வழங்கியிருந்த 23,885 சதுர அடி கொண்ட 14 புதிய நிர்மாண வேலை அலகுகளுக்காக மற்றும் 2007 ஆண்டின் பின்னர் இணக்கச் சான்றிதழ் வழங்கியிருந்த கட்டிடங்கள் எதற்கும் தற்காலிக பெறுமதி மதிப்பீட்டின் மீது வீதவரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமையால் சபைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

2.3.3 வாடகை

--------------

ஆரச்சிகட்டுவ வாராந்த சந்தையில் இருந்து 2013 ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 877,140 இற்கான நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.4 ஏனைய வருமானங்கள்

--------------------------------------

2013 திசெம்பர் 20 திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விளம்பர அறிவித்தல்களுக்காக வரி அறவீடு செய்தல் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த போதிலும் சிலாபம் புத்தளம் பிரதான பாதையின் இரு மருங்கிலும் பொருத்தியிருந்த பாரிய அளவிலான நிலையான அறிவித்தல் பலகைக்காக கட்டணங்கள் அறவீடு செய்தல் முன்னைய ஆண்டைப் போலவே மீளாய்வாண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.3.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணத்தின் பெறுமதி ரூபா 9,312,684 தொகை மற்றும் முத்திரைக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 18,690,241 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.4 மிகை விதிப்பு

-----------------------

ஆரச்சிகட்டுவ வாராந்த சந்தையின் கட்டணம் அறவீடு செய்யும் உரிமை 2005 ஆண்டிற்கான குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 901,705 இற்கான வாடகை அறவிடப்படாமை தொடர்பாக சபையின் தலைவர் உட்பட அலுவலர்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2011 மார்ச் 24 திகதி மிகை விதிப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பணத்தில் தவணை அடிப்படையில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 113,100 அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 788,605 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

(அ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதி விளக்கு கம்பங்களின் எண்ணிக்கை அறுதியாக கணித்திருக்கவில்லை. அத்துடன் வீதி விளக்கு கம்பங்களின் திருத்த வேலை விண்ணப்பித்தல்/ முறைப்பாடுகள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. மின்சார தொழிநுட்பவியலுனர்களினால் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு நடவடிக்கை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அலுவலர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் நடைபெற்றிருக்கவில்லை. அத்துடன் முன்னர் வழங்கியிருந்த மின்சார உபகரணங்கள் மற்றும் துணைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டவை தொடர்பாக உறுதிப்படுத்தாமல் மீண்டும் வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது வீதி விளக்கு பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 998,686 ஆகும்.

(ஆ) பங்கதெனிய பொது நூலகத்தின் சேர்ப்புப் பதிவேட்டில் அடங்கியுள்ள ரூபா 31,644 தொகை பெறுமதியான 204 புத்தகங்களும், உடப்புவ பொது நூலகத்தின் சேர்ப்புப் பதிவேட்டில் அடங்கியுள்ள ரூபா 5,530 பெறுமதியான 88 புத்தகங்களும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீட்டுக்கு சமர்ப்பிக்கப்படாமையால் சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 37,194 ஆகும். இது தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 102 முதல் 110 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------

சபையினால் பெக்கோ இயந்திர சேவைக்காக மாவட்ட விலைக் குழுவின் தீர்மானங்களை மிகைத்து ஒரு மணித்தியாளத்திற்கு ரூபா 400 வீதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 47 மணித்தியாளங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது சபைக்கு ரூபா 18,800 இற்கான நட்டமொன்று ஏற்பட்டுள்ளது.

3.3 முரண்பாட்டு தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------

அரச கடமையில் ஈடுபட்டிருக்கும் போது திடீர் விபத்துக்கள் தொடர்பாக நட்டஈடு வழங்கும் போது பொருத்தமாக சுற்றுநிருப ஏற்பாடுகள் மற்றும் அக்கிரஹார காப்புறுதி முறைமையின்

கீழ் காணப்படும் ஏற்பாடுகளையும் கவனத்தில் எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் சபையின் மின்சார தொழிநுட்பவியலாளர் என கடமையாற்றும் இரண்டு ஊழியர்களுக்கு தனிப்பட்ட உயிர்காப்புறுதி அணவல்களுக்காக வருடாந்த ரூபா 25,146 மற்றும் ரூபா 25,047 வீதம் ரூபா 50,193 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு